ஈடுபடுங்கள் என்று சொல்வதாகத்தானே அர்த்தம். இப்பொழுது எல்லோரும் தலைமறைவாகிவிடுங்கள், 4-ஆம் தேதி வெளியே வாருங்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். அரசுக்குக் கிடைத்த தகவல்களை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, முறைகேடாக நடக்கக் கூடாது (குறுக்கீடுகள்) இதிலே முறைகேடாகவெல்லாம் நடக்கக் கூடாது (குறுக்கீடுகள்) நான் அனுதிக்காமலேயே நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள். முதலமைச்சரும் பதில் சொல்கிறார்கள்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

சேப்பாக்கம் தொகுதி லாக் நகரில் சிலரால் திருமதி புவனேஸ்வரி என்ற பெண் தாக்கப்பட்டது குறித்து. (பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. இளம்வழுதி தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெற்றது உள்பட)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, புவனேஸ்வரி தாக்கப்பட்ட அந்தப் பிரச்சினையை மட்டும் நீங்கள் இங்கே எழுப்புவதாக இருந்தால், எழுப்பலாம். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினைக்குத்தான் அவரை அனுமதித்திருக்கிறேன். அவர் அறிவிப்புக் கொடுத்திருக்கிற பிரச்சினையை மட்டும் எழுப்புவதாக இருந்தால் எழுப்பலாம்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமையன்று நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி (குறுக்கீடு) கடந்த வெள்ளிக்கிழமை நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து பேரவையியின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஒரு தீர்மானத்தை வெள்ளிக்கிழமை அன்று கொடுத்திருந்தேன். அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னீர்கள். மறுநாள் லீவு, எனவே அதை இன்றைக்கு எடுத்திருக்கிறீர்கள். அதனுடைய சாரத்தை இங்கே பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாழக்கிழமை இரவு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதிக்கு நான் அனுமதி

கொடுத்திருக்கிறேன் (குறுக்கீடுகள்) அவர் அந்தப் பிரச்சினையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள்.

(திரு. கே. செல்வராஜ், திரு. அப்பு நடேசன், திருமதி ஜீனத் சர்புதீன் மற்றும் திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் தவிர ஏனைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாழக்கிழமை இரவு (குறுக்கீடு) இருங்கள் நான் முடித்து விடுகிறேன். இங்கே பக்கத்திலே இருக்கிற லாக் நகரில் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம் தொகுதியில் உள்ள லாக் நகரில், எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணியின் துணை அமைப்பாளர் குடியிருந்து வருகிறார். வியாழக்கிழமை இரவு ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர், செல்வம், சேகர், பிரபாகரன், பழனி, விஜயன் இவர்கள் அத்தனை பேரும் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து, அந்த அம்மையாரை இழுத்து வந்து கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். கடுமையான தாக்குதலுக்குள்ளான அந்த அம்மையார் இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதுகுறித்து எங்கள் கட்சியினுடைய தொண்டர் பரமசிவம் என்பவர் அருகில் இருக்கிற டி-1 காவல் நிலையத்தில் புகார் செய்திருக்கிறார். அந்தப் புகாரின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புவனேஸ்வரி பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்தப் பிரச்சினை வேறொன்றின் தொடர்பானது. நீங்கள் இதையும் அதையும் சேர்த்தால் நான் அனுமதி மறுக்க வேண்டிவரும். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் மற்றவர்களுக்கு அனுமதி மறுத்து இருப்பதுபோல் உங்களுக்கும் அனுமதி மறுத்திருக்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாழக்கிழமை இரவு அவர்கள் வீட்டில் தாக்குதல் நடத்தியதைப் போல ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்ததற்கு மேலே போய் பேசக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்த பிரச்சினையைப் பேசக் கூடாது. எந்தப் பிரச்சினைக்கு அனுமதி கொடுத்திருக்கிறேனோ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதைப் பற்றி மட்டும் பேசவேண்டும். புவனேஸ்வரி அம்மையார் தாக்கப்பட்ட பிரச்சினைக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அதுபற்றி மட்டும் நீங்கள் இங்கே கிளப்பலாம். நீங்கள் புவனேஸ்வரி தாக்கப்பட்ட சம்பவத்திற்கு மேல் வேறு பிரச்சினையைப் பேசுவதற்கு இப்போது அனுமதிக்க முடியாது. நீங்கள் புவனேஸ்வரி தாக்கப்பட்டது பற்றிச்சொல்லி அவர் மருத்துவமனையில் இருக்கிறார் என்றெல்லாம் சொன்னீர்கள். அதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன் என்று அன்றைக்கே சொன்னேன். இப்போது நீங்கள் அதற்கு மேல் மற்ற மற்றப் பிரச்சினைகளுக்கு எல்லாம் செல்வதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

முற்பகல் 11-40

திரு. இளம்வழுதி: என்ன நடந்தது என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு சம்பந்தம் இல்லாத பிரச்சினைக்குப் போனால் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு). இதைப்பற்றி மட்டும் கேளுங்கள், அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் (குறுக்கீடு). காவல் துறையில் வழக்குப் பதிவாகி இருந்தால், பதிவான வழக்கு சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி: நான் நேரடியாகவே கேட்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்வதற்கு இதிலே அனுமதி இல்லை. அது நீக்கப்படுகிறது. புவனேஸ்வரி என்ற ஒரு பெண் தாக்கப்பட்டார் என்பதற்கும், இன்னொரு பிரச்சினைக்கும்—தொடர்பு இல்லாததை—நீங்கள் தொடர்புபடுத்தினால் அனுமதிக்க முடியாது. நீங்கள் இந்த முறையில் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு). பரிதி இளம்வழுதி இதுவெல்லாம் எடுபடாது (குறுக்கீடு) முறைகேடாக நடப்பதை நான் அனுமதிக்க முடியாது. மெத்த முறைகேடாக நடக்கிற பரிதி இளம்வழுதியை இனியும் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இப்போது நீங்கள் பேசிய பேச்சுக்களுக்கு என்ன சொல்கிறீர்கள். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி அவையைவிட்டு வெளியேறவேண்டும். இளம்வழுதியை மார்ஷல் அப்புறப்படுத்தவும்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

முறைகேடான வழியிலே நடப்பது என்று முடிவு எடுத்துவிட்ட ஒரு கட்சியின் உறுப்பினர் இப்படித்தான் நடப்பார். அந்தக் கட்சியின் தலைவர் இதைவிட முறைகேடானவர். எனக்குத் தெரியும். அவர் இப்படித்தான் சொல்லி அனுப்புவார். உங்கள் கட்சியின் தலைவர் எவ்வளவு முறைகேடானவர் என்பது நாட்டுக்கே தெரியும். முறைகெட்ட ஒரு கட்சியின் தலைவர் இப்படித்தான் முறைகெட்ட ஒரு மனிதரை தலைவராக ஏற்றுக்கொண்டு இருக்கிற பரிதி இளம்வழுதி இதைவிட மோசமாகக்கூட நடப்பார். பரிதி இளம்வழுதி இந்தப் பேரவைக் கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் அவையில் நுழையலாகாது என்ற எச்சரிக்கையோடு பேரவை விதி 120-ன்படி இதை அறிவிக்கிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிதி இளம்வழுதியை நீங்கள் எதற்கு அனுமதித்தீர்களோ அதற்கு மேல் பேசியது எல்லாம் அவைக்குறிப்பில் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்காது. நான் அப்போதே அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இது முறையா? அவர் இப்போது நடந்து கொண்ட சில முறைகள் எல்லாம் பேரவைக்கு உகந்ததா? (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டும் (குறுக்கீடுகள்) இவ்வளவு முறைகேடாக ஒருவர் நடந்து கொண்டே இருப்பார், அதை நான் அனுமதிக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்ப்பார்த்தால் தவறு, உட்காருங்கள். அடுத்த உறுப்பினர் அதுபற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிற அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன். (குறுக்கீடுகள்) திரு. அ. செல்வராசன் இந்தப் பிரச்சினையில் என்ன சொல்லப் போகிறீர்கள் (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை நான் எடுத்திருக்கிறேன். இந்தப் பிரச்சினையில் நீங்கள் பேசமுடியாது. புவனேஸ்வரி தாக்கப்பட்டது பற்றிய பிரச்சினையை நான் எடுத்திருக்கிறேன் (குறுக்கீடு) திரு. அ. செல்வராசன், உட்காருங்கள், அதுபற்றி அவர் பேசியிருக்கிறார். அவர் பேசுகிறபோது வரம்புமீறி பேசிய காரணத்தால் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கினேன், அவர் மீது நடவடிக்கை எடுத்தேன் (குறுக்கீடு)

(திரு. அ. செல்வராசன், அவையை விட்டு வெளியேறினார்)

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

[1995 மே 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு பிரச்சினையை எடுக்கிறபோது அதில் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை, புவனேஸ்வரி பிரச்சினை முடியட்டும். திரு. தம்புசாமி உட்காருங்கள்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் சொன்னதுபோல் வியாழக்கிழமை அன்று அல்ல, புதன்கிழமை அன்று நடந்தது. புவனேஸ்வரி என்பவருக்கும், இல்லாமல்லி என்பவருக்கும் அன்று தகராறு இல்லை. இல்லாமல்லி என்பவர் அவருடைய வீட்டுக்கு எதிரே—அதாவது குடிசை மாற்று வாரிய வீடுகளில் எதிரெதிரே வாசல்படி இருக்கும்—வீட்டு வாசலில் கற்பூரத்தை வைத்து கொளுத்தினாள். கற்பூரத்தை வைத்து கொளுத்தியவுடன் எதிர்வீட்டில் இருந்தவள், புவனேஸ்வரி அதாவது அரளி என்ற புவனேஸ்வரி, திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த-* பெண்ணான அந்த அம்மாவிடம் போய் சொல்லி 5 பேரை கூட்டிக்கொண்டு வந்தாள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * - என்பது வேண்டாம், பெண் என்று இருக்கட்டும்.

முற்பகல் 11-45

திருமதி ஜீனத் சர்புதீன் : டி.எம்.கே.யைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவரும் அவருடன் வந்த அவருடைய சகோதரிகளோ அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களோ 5,6 பெண்களும், இல்லாமல்லி என்பவரின் வீட்டிற்குள் புகுந்து அவரைக் கண்ட கண்ட வார்த்தைகளால் பேசி, இல்லாமல்லியை அடித்து அவருடைய தாலிச் சரட்டையும் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். அதன் பிறகு இல்லாமல்லியும் அவருடைய தந்தையும் அவர்களுடைய இடத்திற்குப் போய் கேட்டபோது மறுபடியும் அவர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் அவர்கள் வீட்டிற்குத் திரும்பி விட்டனர். திரும்பியவுடன் புவனேஸ்வரி என்ற அந்த பெண் தாலிச் சரட்டிலே பாதியை மட்டும் இவர்கள் வீட்டிற்கு அனுப்பினார்கள். மறுபடியும் திடீரென்று புவனேஸ்வரி 5,6 ஆட்களுடன் வந்து இல்லாமல்லியை அடித்தார்கள். அடித்து விட்டு மிக கெட்டிக்காரத்தனமாக புவனேஸ்வரி போலீஸில் போய் தான் அடிபட்டதாக கம்ப்ளெயின்ட் கொடுத்து விட்டார். அதோடு ராயப்பேட்டை மருத்துவமனைக்கும் சென்று அட்மிட் ஆனார். இதுமாதிரி செய்வதிலே அவர் கைதேர்ந்தவர்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

அவர்களுடைய பத்திரிக்கை ஒன்று இருக்கிறது. முரசொலி. அதிலும் அட்வர்டைஸ் பண்ணி அரசியல்படுத்த விரும்பினார்கள். ஆனால் உண்மையில் இதற்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை. இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் 5, 6 நபர்கள் எக்ஸ்னோரா அமைப்பைச் சேர்ந்தவர்கள். அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஆனாலும் ஒரு தாய் சில சமயத்தில் என்ன செய்வார்கள் என்றால் தன்னுடைய குழந்தை இன்னொருவர் இடத்தில் போய் அடிப்பட்டுக் கொண்டு வந்தால் நீ ஏன் அந்த இடத்திற்குப் போனாய் என்று அந்தக் குழந்தையை திருப்பி அடிப்பார்கள். அந்த முறையிலே இந்த புவனேஸ்வரி புகார் கொடுத்ததன் பேரில் அந்த 5 நபர்களைக் கூட அரெஸ்ட் பண்ணியிருக்கிறார்கள். இதுதான் நடந்த உண்மை. இது சத்தியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-4-1995 அன்று இரவு 8.15 மணியளவில். சென்னை சேப்பாக்கம் லாக் நகரில் வசித்து வரும், சேப்பாக்கம் பகுதி திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அமைப்பின் துணை அமைப்பாளராக செயல்படும், திருமதி புவனேஸ்வரி மற்றும் அவரது சகோதரி ஆனந்தி இருவரையும் அதே நகரில் வசித்து வருகின்ற சேகர், செல்வம், விஜயன் மற்றும் அற்புதராஜ் ஆகியோர் வீடு புகுந்து தாக்கி உள்ளதாகத் தெரிகிறது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட விஜயனின் சகோதரன், கண்ணன் என்பவர் லாக் நகரில் செயல்பட்டுக் கொண்டிருந்த சிறு கடைகளை காலி செய்ய வைத்ததாகவும், இதனால் இரு தரப்பினர் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாகவும், இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பே அவர்களிடையே முன் விரோதம் இருந்து வந்ததாகவும் தெரிய வருகிறது. திருமதி புவனேஸ்வரி மற்றும் திருமதி ஆனந்தி ஆகியோர் இரும்பு பைப்புகளாலும், உருட்டுக் கட்டைகளாலும் குற்றவாளிகளால் தாக்கப்பட்டுள்ளனர்.

தாக்கப்பட்ட இருவரும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருவல்லிக்கேணி காவல் நிலைய உதவி ஆய்வாளர், திரு ஜெகதீசன், அம்மருத்துவமனைக்கு விரைந்து சென்று, திருமதி புவனேஸ்வரி இடமிருந்து புகார் மனு ஒன்றைப் பெற்றுள்ளார். அந்தப் புகாரின் அடிப்படையில், திருவல்லிக்கேணி காவல் நிலைய குற்ற எண் 1733/95-ல், இந்திய தண்டனைச் சட்டம். பிரிவுகள் 341, 323, 324, 354 மற்றும் 506 உட்பிரிவு 2 ஆகியவற்றின் கீழ், வழக்கு ஒன்று அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல் துறையினர் தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையின் அடிப்படையில், குற்றவாளிகளில் ஒருவரான அற்புதராஜ் என்பவர், 28-4-1995 அன்று காலை 7.30 மணியளவில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கே அவரை 10-5-1995 வரை நீதிமன்றக் காவலில் வைக்க ஆணையிடப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட சேகர், செல்வம் மற்றும் விஜயன் ஆகிய மூவரும், 29-4-1995 அன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும், காவல் துறையினர் 48 மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர்.

உறுப்பினர் பரிதி இளம் வழுதி, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, அரசியல் முலாம் பூச நினைப்பது சற்றும் ஏற்புடையது அல்ல.

"நகரை தூய்மைபடுத்தும் திட்டத்தின்" கீழ், அந்த நகர்ப் பகுதியில் அமைந்துள்ள சிறிய கடைகளை காலி செய்ய சிலர் எடுத்த நடவடிக்கைகளால் ஏற்பட்ட முன் விரோதத்தின் அடிப்படையில்தான் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

முற்பகல் 11-50

பொது மக்கள் நலனை முன் நிறுத்தி, சட்டமன்றப் பேரவையில் விவாதிக்க வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு, இதுபோன்ற சிறிய குற்ற நிகழ்வுகளைப் பெரிதுபடுத்தி, இந்த அவையில் அவற்றை விவாதித்து, அவையின் நேரத்தை வீணடிப்பது சரியானதுதானா என்பதை உறுப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் காவல்துறையினரால், உடனடியாகக் கைது செய்யப்படுகிறார்கள் என்றால், காவல்துறை எந்தவிதமான நிர்பந்தமுமின்றிச் சுதந்திரமாக நன்முறையில் செயல்பட்டு வருகிறது என்றுதானே பொருள்? இன்றைய சூழ்நிலையில், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும்—ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, காவல்துறையினர் பாரபட்சமின்றி கைது செய்து, நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பதுதான் உண்மை. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், ஆளுங்கட்சியின் உறுப்பினர்களோ, பொறுப்பாளர்களோ அல்ல. அதை உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி உணர்ந்து கொண்டு பேச வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினர் தகுந்த நடவடிக்கையை ஏற்கெனவே எடுத்துள்ளனர். எனவே. இதை அரசியலாக்கி, ஆதாயம் தேடுகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை (4-5-1995 அன்று எதிர்க் கட்சிகள் நடத்த உள்ள 'பந்த்' தொடர்பாக கைது) குறித்து அவையில் எழுப்புதல்-பேரவைத் தலைவர் தீர்ப்பு-தொடர்ச்சி

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பிரச்சினை? இதிலே பேச வேண்டும் என்கிறீர்களா?

திரு. வே. தம்புசாமி: இதிலே இல்லை; வேறொரு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. திரு. தம்புசாமி சொல்லுங்கள்

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வருகிற 4-ஆம் தேதி, நடைபெறவிருக்கின்ற 'பந்த்'-க்கு. வேண்டுமென்றே. எதிர்க்கட்சிமீது வன்முறை தூண்டுவதற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை இங்கே எழுப்ப சிலர் என்னிடத்தில் அனுமதி கேட்டபோது, நான் ஏன் அதை அனுமதிக்கவில்லை என்பதற்கு அதுபற்றிய விவரத்தைச் சொன்னேன். அதற்கு முதலமைச்சர் அவர்களும், நீங்கள் அனுமதிக்காதது சரிதான் என்பதற்குச் சிலபல விவரங்களையும் எனக்குச் சொன்னார்கள். அதை எப்படி நீங்கள் இதிலே வந்து பேசமுடியும்?

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள், வன்முறையைத் தூண்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தவறான தகவல். வேண்டுமென்றே எதிர்க்கட்சிகள் மீது சுமத்தக்கூடிய (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள்